படவில்லை. ஆகவே, மதிப்புமிக்க அந்தப் பிரபலமான பிற மொழியில் இருக்கின்ற நூல்களைச் சிறப்பான முறையில் தமிழில் வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே: அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

Representation from St. Peter's High School Teachers Association

* Q. No. 368 Thiru R. UMANATH: will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether any representation has been received recently from the Teachers Association, St. Peter's High School, Thanjavur, alleging prevention of teachers by management of C.S.I. Schools from exercising their fundamental right to seek any remedy in a court of law; and

(b) if so, the action taken by the Goverment thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,

(அ) ஆசிரியர் சங்கத்திடமிருந்து எந்தவித முறையிடும் வரவில்லை. ஆனால், சில ஆசிரியர்கள் சில குறைபாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

(ஆ) அந்த அடிப்படையிலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்குத் தேர்வு

* வினா எண். 369— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகராட்சித் துறையில் உள்ள பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தனியாக சர்வீஸ் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.